செய்தி வெளியீடு எண். 228 நாள். 25.04.2018

**மானியத்துடன் கூடிய சூரிய ஒளியின் மூலம் மின்சார உற்பத்தி சாதனம் - திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு**

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் மரபுசாரா எரிசக்தியினை மேம்படுத்தும் திட்டங்கள் மாவட்டம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்பொழுது தமிழக அரசு வாயிலாக மத்திய அரசு 30% சதவிகிதம் மானியத்துடன் கூடிய சூரிய ஒளியின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் சாதனம் (Grid Connected Roof Top Solar System) கட்டிடங்களின் மேற்கூரையில் அமைக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைக்கப்படும் சூரிய மின் உற்பத்தி சாதனத்தின் மூலம் அனைத்து மின் சாதனைகளை இயக்கலாம். உதாரணமாக 1 கிலோ வாட் சூரிய மின்சாதனம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 4 முதல் 5 Units வரை மின்சாரம் உற்பத்தி செய்யும். இதில் நுகர்வோரின் பயன்பாடு தவிர்த்து மீதமுள்ள மின்சாரம், மின்வாரியத்திற்கு நிகர அளவி (Net Meter) மூலம் அனுப்பப்படுவதால் மின்கட்டணம் செலுத்துவது முற்றிலும் குறைக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஒரு பயனாளி தங்களுடைய மின்சார உபயோக தேவைக்கேற்ப 1 KW முதல் 500 KW வரை சூரிய மின் உற்பத்தி சாதனம் அமைத்துப் பயன்பெறலாம். இம்மானியம் பெறுவதற்கு அனைத்து தனிநபர் குடியிருப்புகள், அடுக்குமாடி குடியிருப்புகள், கான்கிரீட் கட்டிடங்களில் இயங்கும் தனியார் பள்ளிகள், கல்லூரிகள், அறக்கட்டளைகள், மருத்துவமனைகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் கல்விக்கான பணிமனைகள், விடுதிகள் போன்றவை தகுதியானவை ஆகும்.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்பும் தனிநபர் அல்லது நிறுவனங்கள் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதல் தளத்தில் அமைந்துள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் இயங்கி வரும் TEDA பிரிவில் உரிய ஆலோசனைகள் பெறலாம். மேலும் அலுவலக பணி நேரங்களில் TEDA பிரிவின் உதவி பொறியாளரை நேரடியாகவும், அலைபேசி வாயிலாகவும் 7708064723, 7708064631 மற்றும் tlr@teda.in என்ற மின்னஞ்சல் மூலமாகவும் சூரிய மின்சக்தி ஆற்றல் உற்பத்தி மற்றும் மானியம் தொடர்பான அனைத்து தகவல்களையும் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்க விரும்பும் பயனாளிகள் www.teda.in என்ற இணையதளத்தில் விண்ணப்பித்து பயன்பெறலாம் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**